**கவனிக்க.**- 2007.12.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1530 - 2007 දෙසැම්බර් 28 වැනි සිකුරාදා - 2007.12.28

1530 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1202 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1217 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, சனவரி 04 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, திசெம்பர் 20 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள்:**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணபப்பம் கோரப்படுகின்றது.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவராயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணபங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, சனவரி மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007, மார்கழி 5.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. களுத்துறை | புளத்சிங்கள | வெல்கம பிரிவின் பிறப்பு, இறப்பு பஸ்துன் கோறளை கிழக்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |
| 2. களுத்துறை | புளத்சிங்கள | பஸ்துன் கோறளை கிழக்கு மககம பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 3. களுத்துறை | வளள்லாவிட்ட | மீகஸ்தன்ன பிரிவின் பிறப்பு, இறப்பு பஸ்துன் கோறளை கிழக்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |
| 4. களுத்துறை | ஹொறண | பண்டாரகம பிரிவின் பிறப்பு, இறப்பு றய்கம் கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |
| 5. களுத்துறை | பேருவல | களுத்துறை பாணந்துறை தொட்டமுனை பிரிவின் மொல்லியமலை பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |
| 6. களுத்துறை | பாணந்துறை | களுத்துறை பாணந்துறை தொட்டமுனை பிரிவின் ஹேனமுல்லை பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |

12-673

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி – இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவராயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, சனவரி மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007, மார்கழி 5.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. இரத்தினபுரி | கொடகவெல | றக்வான பிரிவின் வெத்திலகந்த பிரதேச மேலதிக விவாக (கண்டி, மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், இரத்தினபுரி |
| 2. இரத்தினபுரி | கலவான | குக்குரு கோறளை மதபத்து பிரிவின் மேலதிக விவாக (கண்டி மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், இரத்தினபுரி |
| 3. இரத்தினபுரி | குருவிட்ட | எல்லாவல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் குருவிட்ட கோறளை பிரிவின் விவாக (பொது மற்றும் கண்டி) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், இரத்தினபுரி |
| 4. இரத்தினபுரி | குருவிட்ட | பாதகம கல்பே, ஊறுபலவ்வ மற்றும் கித்துல்பே பிரிவின் மேலதிக விவாக (கண்டி மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், இரத்தினபுரி |
| 5. இரத்தினபுரி | இரத்தினபுரி | குறுவிட்ட கோறளை பிரிவின் இரத்தினபுரி நகர பிரிவின் மேலதிக விவாக (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், இரத்தினபுரி |

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 6. இரத்தினபுரி | குருவிட்ட | புசல்ல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் குருவிட்ட கோறளை பிரிவின் விவாக (பொது மற்றும் கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், இரத்தினபுரி |

12-696

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – கண்டி, மாத்தளை, மாத்தறை, அநுராதபுரம் மாவட்டங்கள்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப்பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, தை மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

E. M. குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007, மார்கழி 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. கண்டி | கடவத்சதற மற்றும் கங்கவட்ட கோறளை | கடவத்சதற மற்றும் கங்கவட்ட கோறளை (கண்டி நகரம்) பிரிவு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கண்டி |

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 2. கண்டி | கடவத்சதற மற்றும் கங்கவட்ட கோறளை | கடுகஸ்தோட்ட பிரிவின் வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கண்டி |
| 3. கண்டி | கடவத்சதற மற்றும் கங்கவட்ட கோறளை | கங்கவட்ட கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கண்டி நகர பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கண்டி |
| 4. கண்டி | பாணதும்பற | பள்ளேகம்பக கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பாணதும்பற பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கண்டி |
| 5. கண்டி | பாணதும்பற | பாணதும்பற பிரிவின் உடதலவின்ன மடிகே பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கண்டி |
| 6. கண்டி | பாணதும்பற | பாணதும்பற பிரிவின் உடதலவின்ன வத்தேகெதற மடிகே பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், கண்டி |
| 7. மாத்தளை | உக்குவலை | மதியவத்த நகெனகிர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை தெற்கு பிரிவின் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாத்தளை |
| 8. மாத்தளை | மாத்தளை | மாத்தளை நகர பிரிவின் மேலதிக விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாத்தளை |
| 9. மாத்தறை | மாலிமபட | தெலிச்சவில பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலிகம விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாத்தறை |
| 10. அனுராதபுரம் | கலேன்பிந்துனு வாவ | வடக்கு மாடம்புவா பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் குறுளுு பலாத்த பிரிவின் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், அனுராதபுரம் |

| *மாவட்டம்* | *பிரதேச செயலக பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| 11. அனுராதபுரம் | மத்திய நுவரகம் பலாத | அனுராதபுர பழைய நகர பிரிவின் பிறப்பு இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், அனுராதபுரம் |
| 12. அனுராதபுரம் | கெக்கிராவ | தெற்கு கலாகம் பிரிவின் பிறப்பு இறப்பு மற்றும் கலாகம்பலாத்த விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், அனுராதபுரம் |

12-775

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி

**இரத்துச் செய்தல்**

என்னால் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் பிரிவுகளில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரும் அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் கோரல் புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இத்தால் இரத்துச்செய்கிறேன்.

| *மாவட்டம்* | *பிரதேச செயலக பிரிவு* | *விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும்* | *வர்த்தமானி இலக்கமும் திகதியும்* |
|---|---|---|---|
| 01 கண்டி | கடவத்சதற கங்கவட்ட கோறளை | கடவத்சதற கங்கவட்ட கோறளை (கண்டி நகர) பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2003.09.19 ஆந் திகதிய 1307 ஆம் இலக்கம் |
| 02 கண்டி | பாணதும்பற | பாணதும்பற பிரிவின் உடதலவின்ன பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 2002.06.14 ஆந் திகதிய 1241 ஆம் இலக்கம் |
| 03 அனுராதபுரம் | மத்திய நுவரகம்பலாத | அநுராதபுர பழைய நகர பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2000.03.03 ஆந் திகதிய 1122 ஆம் இலக்கம் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007, நவெம்பர்.

12-777

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

உப பொலிஸ் பரிசோதகர் (விசேட அதிரப்படை) பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "உப பொலிஸ் பரிசோதகர் (விசேட அதிரடிப்படை (பதவி))" என குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 2008.01.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேகுறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

**3. சம்பள அளவுத் திட்டம் :**

ரூபா 1,90,200-7 x 2,160-2 x 2,2880 - 8 x 3,840- 17 x 4,500-3,18,300.

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும்.

(அ) **விசேட கடினப் படிகள் :**

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200

(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600

(ஆ) **இணைந்த படிகள் :**

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 12,000

(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 4,000

(அ) இலவச பயண வசதி

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்.

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப் படும்.

(ஈ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்.

(உ) கடமைக்கான பிரயாணச் செலவுகள், கஷ்டமான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற் காகவும் வெகுமதியாகப் பணம் வழங்கப் படும்.

(ஊ) விசேட அதிரடிப்படை அடிப்படை பயிற்சி யின் பின்பு விசேட அதிரடிப்படைப் பிரிவில் சேவை செய்யும் காலம் வரையும் அதில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக கொடுக்கப்படும் கொடுப்பனவு வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள்.**- (அ) **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 - 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம், தாய் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியெய்தியிருக்கவும் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுக்கும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க. பொ. த (சா.த.) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழிநுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடை யாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த (சா.த.) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப் படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) கீழ் வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பங்கள் விசேடமாக பரிசீலிக்கப்படும். (சான்றிதழ்கள் இருத்தல் அவசியம்) :

* அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத கால கணனி பாடநெறி உயர் தர பரீட்சையில் விஞ்ஞான பாடத்திட்டத்துடன்,

* அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இரு வருட கால மின்னியல் பாட நெறியில் டிப்ளோமா பட்டத்துடன் அதே நிறுவனத்தில் குறைந்தது இரு வருட காலப் பிரயோகப் பயிற்சியும்,

* தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியும் அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மோட்டார் தொழில்நுட்ப பயிற்சி நெறியும் அதே நிறுவனத்தில் மூன்று வருட வேலை அனுபவமும்.

(ஈ) ***பௌதீக தகைமைகள் :***

*உயரம் :* 5 அடி 6 அங்குலம் (ஆகக் குறைந்தது) ;
*மார்பு :* 32 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்டநிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய, தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(உ) ***பார்வை தொடர்பான தேவை.***- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணில் பார்வை 6/6 ஆகவும் மற்றக் கண்ணில் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமையற்றவராவர்.

(ஊ) ***பிற தகைமைகள்.***- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடைய தாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும் உடற் பயிற்சிகளில் பங்கு பற்றலாம். அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (1) 1500 மீற்றர் | - | 6 நிமிடங்கள் 20 விநாடிகள் |
| (2) சிற்றப் (Situp) | - | 30 விநாடியில் 15 தடவைகள் |
| (3) டிப்ஸ் (Dips) | - | 30 விநாடியில் 15 தடவைகள் |
| (4) ஸ்கொட்ஸ் (Scott thrush) | - | 30 விநாடியில் 20 தடவைகள் |

* பரீட்சையில் சித்தியெய்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

* எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாழ்களை அடக்கி உள்ளனர்.

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்.
* பொது அறிவும் பொது நுட்பமும்-1 மணித்தியாலம்.

6. **வைத்திய பரீட்சகர்**.- ஆகக் கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணை**.- (அ) விண்ணப்பதாரியின் நன்னடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும், நண்பர்களினதும் நடத்தை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப் படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல்கள் கொடுப்பது அவரை ஆட்சேர்ப்பதற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

* பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி அமைச்சினால் 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந் திகதி பொது நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிரூபத்தினதும் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெற்றல் வேண்டும்.

* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

* நியமன தேதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

9. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/விபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் மூன்று ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக்கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி உடையதன் 41 ஆந் இலக்கமும் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிராகரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியினுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிரூபத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருடகால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத்தொகை இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியில் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;
(இ) கல்வித் தகைமைகளை சான்றுப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்குப் புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;
(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) ஏற்கனவே அரச வேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 3" அளவுத் தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு :-** பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்து செலவோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

உப பொலிஸ் பரிசோதகர் (விசேட அதிரடிப்படை) பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
   (ஆ) பெயர் (முதலெழுத்துக்களுடன்) :-----.
   (இ) விண்ணப்பதாரரின் பதவி வரிசை :-----.
2. தேசிய அடையாள அட்டை இல.:-----.
   (பிரதியை இணைக்கவும்)
3. தந்தையின் முழுப்பெயர் :-----.
4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
   பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் :-----.
   மாகாணம் :-----.
5 (அ) தற்போதைய முகவரி :-----.
   (ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
   (இ) நிரந்தர முகவரி :-----.
   (ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும் தேர்தல் மாவட்டமும் :-----.
6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா? பதிவு மூலம் எனின் பதிவுச்சான்றிதழ் பிரதியை இணைக்கவும் :-----.

(இ) வம்சாவழி மூலம் இலங்கை பிரசையானால் பின்வருப வர்களின் பிறந்த இடத்தை குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-

வருடங்கள்:-----. மாதங்கள்:-----. நாட்கள்:-----.

8. உயரம் : அடி -----. அங்குலம் -----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள்/தகைமைகள் உண்டா? :-----.

11. திருமணம் ஆனவரா? /திருமணம் ஆகாதவரா? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்த வரா? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்த துண்டா? (அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் பொலிஸில் அல்லது இலங்கை உப பொலிசில் சேவை செய்துள்ளீரா ? (அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக) ? :-----.

16. (அ) தற்போது படைதாங்கு சேவையில் இருக்கிறீரா ? :-----.

(தற்போது படைதாங்கு சேவையில் இருந்தால் அப்படை தாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப் பத்தை அனுப்ப வேண்டும்).

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்துள்ளீரா ? :-----.
(படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

17. படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா அல்லது இருக்கின்றீரா? (அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்) :-----.

18. நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின்கீழ் சேவையாற்றியுள்ளீரா? (அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக.)

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா ? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப் பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரங்களைத் தருக) :-----.

20. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

12-816

---

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

### பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிகள் (விசேட அதிரப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "பொலிஸ் கொஸ்தாபல் அல்லது பொலிஸ் கொஸ்தாபல் சாரதி (விசேட அதிரடிப்படை)" என குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 2008.03.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேகுறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

*3.* **சம்பள அளவுத் திட்டம் :**

*பொலிஸ் கொஸ்தாபல் பதவி :*
*ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880- ரூபா 2,54,100.*

*பொலிஸ் கொஸ்தாபல் சாரதி :*
*ரூபா 1,71,360-7 x 1,740-10 x 2,160 - 17 x 2,880- ரூபா 2,54,100.*

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும்.

*(அ) விசேட கடினப் படிகள் :*

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600

*(ஆ) இணைந்த படிகள் :*

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 10,500
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 3,500

(அ) இலவச பயண வசதி
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்.
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்.
(ஈ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்.
(உ) கடமைக்கான பிரயாணச் செலவுகள், கஷ்டமான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகப் பணம் வழங்கப்படும்.
(ஊ) விசேட அதிரடிப்படை அடிப்படை பயிற்சியின் பின்பு விசேட அதிரடிப்படைப் பிரிவில் சேவை செய்யும் காலம் வரையும் அதில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக கொடுக்கப்படும் கொடுப்பனவு வழங்கப்படும்

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

*(அ) வயதெல்லை :*

தகுதிகூர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி.-

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 - 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதிகூர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி.-

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 - 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

*(ஆ) கல்வித் தகைமைகள்:*

தகுதிகூர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி.-

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம், தாய் மொழி அடங்கலாக ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தகுதிகூர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி.-

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம், தாய் மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுக்கும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க. பொ. த (சா.த.) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழிநுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.-** விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த (சா.த.) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) *கீழ் வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பங்கள் விசேடமாக பரிசீலிக்கப்படும். (சான்றிதழ்கள் இருத்தல் அவசியம்) :*

* அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 6 மாதங்களுக்கு குறையாத கணனி தொடக்க கற்கை நெறி பெற்றிருத்தல்

* அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மின்னியல் விஞ்ஞானம் சம்பந்தமான இரு வருட கால கற்கை நெறியும்

* அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 3 வருடத்திற்கு குறையாத இயந்திர தொழில் நுட்ப கற்கை நெறியும் அதே நிறுவனத்தில் 3 வருடத்திற்கு குறையாத செய்முறை பயிற்சியும்.

கீழ் வரும் தகைமைகளைக் கொண்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி விண்ணப்பங்கள் விசேடமாக பரிசீலிக்கப்படும். (சான்றிதழ்கள் இருத்தல் அவசியம்) :

* அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மூன்று வருடங்கள் மோட்டார் வாகன தொழில் நுட்பம் கற்கை நெறி பெற்றிருத்தல் அதே நிறுவனத்தில் 3 வருடத்திற்கு சேவை செய்த அனுபவம் பெற்றிருத்தல்.

(ஈ) பௌதிக தகைமைகள் :

* தகுதி கூர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி :
உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது) ;
மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்டநிலையில்)

* தகுதி கூர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி :
உயரம் : 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது) ;
மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்டநிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய, தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

* தகுதி கூர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி.

தொழில் தகைமைகள் :

(1) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்

(2) மேற் குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்ற பின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: மோட்டார் வாகன தொழில் நுட்ப அறிவு, மோட்டார் வாகனங்களை திருத்தும் அறிவு வாகனங்களை செலுத்துவதில் நீண்டகால அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும், உடல் அவயவங்களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவதொரு அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய வேட்பாளர் சேவைக்கு பொருத்தமானவர் என்றும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவர்.

அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது, பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அது போலவே வீதிகள் போக்கு வரத்து சைகைகள் தொடர்பாக வேட்பாளர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு வேட்பாளரும் வாகனம் செலுத்துவ தற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில் நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(உ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணில் பார்வை 6/6 ஆகவும் மற்றக் கண்ணில் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமையற்றவராவர்.

(ஊ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும் உடற் பயிற்சிகளில் பங்கு பற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும் :-

***தகுதி கூர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி :***
(1) 1500 மீற்றர் - 6 நிமிடங்கள் 40 விநாடிகள்

***தகுதி கூர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி :***
(1) 1500 மீற்றர் - 6 நிமிடங்கள் 40 விநாடிகள்

* பரீட்சையில் சித்தியெய்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

* எழுத்து பரீட்சை (பொலிஸ் கொஸ்தாபல்)

* எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை அடக்கி உள்ளனர்.

45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்.
பொது அறிவும் பொது நுட்பமும் 1 மணித்தியாலம்.

6. **வைத்திய பரீட்சை**.- (பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி)

*பொலிஸ் கொஸ்தாபல் சாரதி விண்ணப்பதாரர் தொழில்சார் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

தொழில் பரீட்சையின்போது கீழ்காணும் விடயங்கள் பரீட்சிக்கப் படும் :

(அ) வாகனம் செலுத்தும் திறன்
(ஆ) பெருந்தெரு சட்டக்கோவை.
(இ) வாகனப் பராமரிப்பு, சிறு பழுதுபார்த்தல், வேலை தொடர்பான அறிவு.

**குறிப்பு:** நியமனம் பெற்ற பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தகுதி கூர்காண் காலம் முடிவடைவதற்கு முன்பாக பாரவண்டிகள் செலுத்துவதற்கான தகுதி சான்றிதழ் பெறுவதோடு பொலிஸ் கல்லூரியினால் நடாத்தப்படும் பாரவண்டிகள் செலுத்துவதற்கான பரீட்சையிலும் சித்தியெய்தல் வேண்டும்.

7. **வைத்திய பரீட்சை**.- ஆகக் கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

8. **பின்னணி விசாரணை**.-

(அ) விண்ணப்பதாரியயின் நன்நடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும் நண்பர்களினதும் நடத்தை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல்கள் கொடுப்பது அவரை ஆட்சேர்ப்பதற்கு தகைமை அற்றதாகும் ஆட் சேர்ப்பின் பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

9. **அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

* பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி அமைச்சினால் 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந் திகதி பொது நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிரூபத்தினதும் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெற்றல் வேண்டும்.
* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
* நியமன தேதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடைந்தவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும்வரை நிறுத்திவைக்கப்படும்.

10. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் மூன்று ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக்கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

II. நியமனம் உறுதிப்படுத்துவதற்கு முன் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி மேற்போந்த பந்தி அ I இங்கு மேலதிகமாக பொலிஸ் கல்லூரிகளினால் நடாத்தப்படும். பாரவண்டிகள் செலுத்துதல் தொடர்பான பரீட்சைகளிலும் சித்தியெய்தல் வேண்டும்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி உடையதன் 41 ஆந் இலக்கமும் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிராகரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியினுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிரூபத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருடகால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத்தொகை இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியில் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;
(இ) கல்வித் தகைமைகளை சான்றுப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்குப் புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;
(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

14. (அ) ஏனவே அரச வேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 3" அளவுத் தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு** :- பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்து செலவோ பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

**பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிகள்**
(விசேட அதிரடிப்படை)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
(ஆ) பெயர் (முதலெழுத்துக்களுடன்) :-----.
(இ) விண்ணப்பதாரரின் பதவி வரிசை ? :-----.
2. தேசிய அடையாள அட்டை இல.:-----.
(பிரதியை இணைக்கவும்)
3. தந்தையின் முழுப்பெயர் :-----.
4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5 (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும் தேர்தல் மாவட்டமும் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.
(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா? பதிவு மூலம் எனின் பதிவுச்சான்றிதழ் பிரதியை இணைக்கவும் :-----.
(இ) வம்சாவழி மூலம் இலங்கை பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடத்தை குறிப்பிடவும் :-
(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-

ஆண்டுகள்:-----. மாதங்கள்:-----. நாட்கள்:-----.

8. உயரம் : அடி -----. அங்குலம் -----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள்/தகைமைகள் உண்டா? :-----.

11. திருமணம் ஆனவரா? /திருமணம் ஆகாதவரா? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்தவரா? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கை பொலிஸில் அல்லது இலங்கை உபசேவைப் பொலிசில் சேவை செய்துள்ளீரா ? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகிய தற்கான காரணங்களைத் தருக ? :-----.

16. (அ) (தற்போது படைதாங்கு சேவையில் இருக்கின்றீரா ? : -----.
(தற்போது படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படை தாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்).

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்துள்ளீரா ? :-----.
(படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.)

18. (அ) படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்) :-----.

நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின்கீழ் சேவையாற்றியுள்ளீரா? (அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி, திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக) :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா ? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரங்களைத் தருக) :-----.

20. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----.
விண்ப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

12-817

## சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சில் போக்குவரத்து அலுவலர் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு

சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சில் போக்குவரத்து அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக தகைமை பெற்ற இலங்கைப் பிரஜைகளிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தேவையான தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் :-

(அ) சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் ;

(ஆ) 2008.01.31 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். (ஏற்கனவே அரச அல்லது மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச மட்ட வயதெல்லை ஏற்புடையதன்று).

(இ) கல்வித் தகைமைகள் :

(i) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (ஒரு தடவையில் ஐந்து பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

அல்லது

(ii) தேசிய பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் "A" அல்லது "B" தரத்திலான சித்திகளுடன் ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல். (ஒரு தடவையில் ஐந்து பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

(ஈ) தொழில்சார் மற்றும் வேறு தகைமைகள் :

(i) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில்/மோட்டார் வாகன பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்தில் மோட்டார் தொழில்நுட்பவியல் அல்லது மோட்டார் பொறியியல் தொடர்பான 03 வருடங்களுக்கு குறையாத முழு நேரப் பாடநெறி ஒன்றைக் கற்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

(ii) எல்லா வகையான மோட்டார் கார் மற்றும் லொறி செலுத்துவது தொடர்பான செல்லுபடியான தேர்ச்சிச் சான்றிதழைக் கொண்டிருத்தல்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனம் ஒன்றில் மோட்டார் தொழில்நுட்பவியல் தொடர்பான 10 வருட கால அனுபவமும் அதில் 05 வருடங்கள் பரிசோதகராக / கட்டுப்பாட்டு அலுவலராகக் கடமைபுரிந்திருத்தல்.

*2.* **ஆட்சேர்ப்பு முறை.**- (அ) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமை களையும் நிறைவுசெய்துள்ள விண்ணப்பதாரிகள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 15/09 இன் பிரகாரம் தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும். எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைபெறும். இந்த எழுத்துப் பரீட்சையில் மோட்டார் தொழில்நுட்ப அறிவு, வாகனப் பராமரிப்பு தொடர்பான அறிவு, மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டம் மற்றும் வீதி ஒழுங்குகள் தொடர்பான அறிவு மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம், வருமான அனுமதிப்பத்திரம், காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் திடீர் விபத்துகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் முறைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படுவதோடு இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 50% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

(ஆ) நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்புக்கான எழுத்துப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

*3.* **சம்பள அளவுத்திட்டம்.**-இந்தப் பதவிக்கான வருடாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 14,910 - 10 x 170 - 11 x 180 - 6 x 240 - 14 x 320 - ரூபா 24,510.

ரூபா 15,420 சம்பளத்தை அடைவதற்கு முன்னர் முதலாவது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

**4. சேவை நிபந்தனைகள்.**- (அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையதுமாகும். முதலில் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் நியமனம் வழங்கப்படும்.

(ஆ) விதவைகள், அனாதைகள்/ விதுரர்கள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(இ) தாபன விதிக்கோவையின் I ஆம் பிரிவின் II ஆம் வாசகத்தில் உள்ள அரச சேவை பதவிகளுக்கான நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகள் தொடர்பில் விண்ணப்பதாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஈ) பதவிக்கு நியமிக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்குள் 2007.05.28 ஆந் திகதிய பொ. நி. சு. 07/2007 ஏற்பாடுகளுக்கமைய அரச மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ;
(ii) கல்விச் சான்றிதழ் பிரதிகள் ;
(iii) மேலே I (இ) பந்தியில் கூறப்பட்டுள்ள தொழில் தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்/கடிதப் பிரதிகள் (இப்பிரதிகள் மீண்டும் வழங்கப்பட மாட்டாது).

6. இத்துடன் இருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், சுற்றாடல், இயற்கை வள அமைச்சு, இல. 82, ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு 2008.01.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின இடது பக்க மேல் மூலையில் "போக்குவரத்து அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள்" என குறிக்கப்படுதல் வேண்டும்.

7. அரச மற்றும் மாகாண அரச சேவையில் பணி புரியும் விண்ணப்பதாரிகள் அவர்களின் திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விண்ணப்பப்படிவத்திலுள்ள ஏதேனும் பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புக்கு முன்பு கண்டுபிடிக்கப்படின் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். இவ்வாறான பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பின் பின்பு கண்டுபிடிக்கப்படின் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9. இவ்வறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான உரிமை அரச சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கிணங்க சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

எம். ஏ. ஆர். டி. ஜயதிலக்க,
செயலாளர்,
சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு.

சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சு,
"சம்பத்பாய",
இல. 82, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2007.12.11

12-752

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

பல் மருத்துவத் துறைக்கான மேலதிக சேவைகளை வழங்கும் தொழில்கள் தொடர்பான தொழிற்பயிற்சி பாடநெறிக்காக மாணவர்களை இணைத்துக்கொள்ளல்-2007

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் பல் வைத்தியத்துறை சார்ந்த மாணவர்களுக்கான (பெண்) பயிற்சிப் பாடநெறிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

1. 2003 ஆம், 2004 ஆம் ஆண்டுகளின் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் பெற்ற 'Z' புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

2.

2.1 முதல் பயிற்சிக் குழுவில் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் மாவட்ட ரீதியாக கீழ்க்காணும் பட்டியலின் அடிப்படையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் :-

| மாவட்டம் | வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| கம்பஹா | 20 |
| களுத்துறை | 13 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 03 |
| நுவரெலியா | 03 |
| காலி | 15 |
| புத்தளம் | 03 |
| அனுராதபுரம் | 10 |
| பொலனறுவை | 04 |
| யாழ்ப்பாணம் | 01 |
| முல்லைத்தீவு | 02 |
| மன்னார் | 01 |
| கிளிநொச்சி | 02 |
| கல்முனை | 05 |
| அம்பாறை | 01 |
| மட்டக்களப்பு | 02 |
| திருகோணமலை | 04 |
| பதுளை | 09 |
| மொனராகலை | 08 |
| இரத்தினபுரி | 04 |
| கேகாலை | 03 |

2.2 மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வசிக்காத மாணவிகள் விண்ணப்பிக்கலாம். அவர்கள் இரண்டாம் பயிற்சிக் குழுவில் இருந்து தெரிவுசெய்யப்படுவார்கள்.

3. இது ஒரு முழுநேர பாடநெறியாகும். வார நாட்களில் 5 நாட்களும் வார இறுதி நாட்களில் சனிக்கிழமைகளில் மதியம் வரையும் நடைபெறவுள்ளதால் வேறு பாட நெறிகளை பயில்வோர் இப்பாட நெறிக்காக விண்ணப்பித்தல் கூடாது.

4. பாடநெறிகளுக்கான பயிற்சிக் காலம் இரண்டு வருடங்கள்.

5. **கல்வித் தகைமைகள் :**

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் தமிழ் மொழி/சிங்களம், கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை 2003, 2004 ஆம் ஆண்டுகளில் விஞ்ஞானப் பாடத்தில் ஒரே அமர்வில் உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தியும் ஏனைய பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல். Z புள்ளி அடிப்படையில் விண்ணப்பிக்கவும்.

6. **ஏனைய தகைமைகள் :**

(அ) பெண்கள் 04 அடி 10 அங்குலத்திற்கு மேற்பட்டவர்களாக இருத்தல்.

(ஆ) திருமணம் செய்யாதவர்கள் இப்பயிற்சிக் காலம் முடியும்வரை திருமணம் செய்யக் கூடாது.

(இ) 2008.01.25 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) நாட்டில் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றச் சம்மதிப்பவராக இருத்தல் வேண்டும்.

(உ) தேக ஆரோக்கியம் உடையவராகவும் சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் மூன்று வருடங்களாவது வசித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்திசெய்து அதில் ரூபா 500 பெறுமதியுடைய முத்திரை ஒட்டி அதன்மேல் கையொப்பமிட்டு முத்திரையை இரத்துச்செய்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/ கல்விச் சேவை/ அரச கணக்காய்வாளர் சேவை/ அரச பாடசாலை அதிபர்கள்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் ரூபா 1,24,080 க்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகிய யாராவது ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(இ) முழுமையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில், "பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு, 'சுவசிறிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2008.01.25 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்புவதுடன் கடித உறையின் இடதுமேல் மூலையில் "பல் மருத்துவத் துறைக்கான மேலதிக சேவைகளை வழங்கும் பாடநெறிக்காக மாணவர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

9. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. மேற்குறிப்பிட்ட தகைமைகளுடன் விண்ணப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்படும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்விச் சான்றிதழ் மூலப்பிரதிகள், மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து வெளிவாரி பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட பெறுபேறு படிவங்கள் அல்லது பரீட்சை அமர்வு பாடசாலை அதிபர்களினால் கொடுக்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி ;

(இ) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சை புள்ளிகள் குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ் ;

(ஈ) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப் பத்திரம் ;

(உ) 2004, 2005, 2006 ஆம் ஆண்டுகளில் உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களின் பிரதிகள், விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாதவிடத்தில் அவரது

பெற்றோரின் பெயர்கள் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இத்தகையோர் வாக்காளர் பட்டியலுக்கு மேலதிகமாக கிராம சேவையாளரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. **பயிற்சித் திட்டம்.**- (i) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நெறிகளுக்காக மஹரகமை பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள். பாடநெறிகள் ஆங்கில மொழி மூலமே போதிக்கப்படும்.

(ii) பயிற்சிப் பாடசாலைகளின் சட்ட திட்டங்களையும் ஒழுங்குகளையும் கடைப்பிடிக்க வேண்டியதுடன் சுகாதார அமைச்சினால் காலப்போக்கில் மேற்கொள்ளப்படும் சட்டதிட்ட திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதும் அவசியமாகும்.

(iii) இப்பயிலுனர்களுக்கான பயிற்சிகளின்போது நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையாது அல்லது நடத்தை மற்றும் செயற்பாடுகள் திருப்தியற்ற அல்லது பரீட்சை விதிமுறைகளை பின்பற்றாது மற்றும் பயிற்சிக்காலப் பகுதியில் உரிய வகையில் சமுகமளிக்காது இருப்பின் எவ்வித முன்னறிவித்தலோ அல்லது நட்டஈடு இன்றியோ எந்நேரத்திலும் இடைநிறுத்தப்படலாம்.

(iv) பயிற்சியின்போது கொடுப்பனவாக ரூபா 6,000 வழங்கப்படும்.

(v) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும்போது சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துட னான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். அதாவது பயிலுநர் பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதுடன் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் 10 வருடங்கள் சேவையாற்ற முடியும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது தொடர முடியாவிடின் மேற்குறிப் பிட்ட (iii) இல் உள்ளவாறு பயிலுநர் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் மீள்செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப்பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

13. **சேவைக்கு அமர்த்தல் விதிகள்.**- பயிற்சிநெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெறும் பயிலுநர்களுக்கு குறித்த துறைகளுக்கான தரம் III க்கான நியமனங்கள் அவர்களது பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டின் எப்பகுதியாயினும் வெற்றிடங்களைப் பொறுத்து இந்நியமனங்கள் வழங்கப்படும். முதலாவது நியமனம் கிடைக்கப்பெறும் இடத்தில் அவர்கள் 02 வருடங்கள் கட்டாய சேவையாற்ற வேண்டும்.

14. விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாக நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின், பயிற்சியிலிருந்து இடைநிறுத்தவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறும் கறுப்புப் பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் இலங்கையில் எப்பகுதியாயினும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் தகுதியை நிரூபிப்பதற்கான மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

16. இலங்கைச் சனநாயக சோசலிஷ குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதார சேவைத் திணைக்களத்தின் கொள்கை மாற்றங்களுக்கேற்பவும், நீதி மற்றும் ஏனைய அரச சட்டதிட்ட மாற்றங்களுக்கும் கீழ்ப்படிவாக செயற்பட வேண்டும்.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

வைத்திய கலாநிதி எச். ஏ. பி. காந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு,
இல. 385. வண பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2007,.............................

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு**

*பல் மருத்துவத் துறைக்கான மேலதிக சேவைகளை வழங்கும் தொழில்கள் தொடர்பான தொழிற்பயிற்சி பாடநெறிக்காக மாணவர்களை இணைத்துக்கொள்ளல்-2007*

1. (a) முதலெழுத்துக்களுடன் பெயர் :

   (b) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

   (ii) மாவட்டம் :

   (iii) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா ? ஆம்/இல்லை

   (iv) ஆம் எனில் எவ்வளவு காலம்

4. பிறந்த திகதி :

   ஆண்டு ---------- மாதம் ---------- திகதி ----------

   25.01.2008 திகதியன்று வயது :

   வருடங்கள் ---------- மாதங்கள் ---------- நாட்கள் ----------

5. உயரம் :

   அடி ---------- அங்குலம் ----------

6. நீங்கள் இலங்கைப் பிரசையா ? (பொருத்தமான கூட்டில் " ✓ " குறியிடுக.)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

7. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. விவாக நிலை :----------

9. கல்வித் தகைமை :

(அ) கல்வி பொது தராதரப்பத்திர (உயர் தரம்) பரீட்சை (விஞ்ஞான பிரிவு மட்டும்) ----------
(தயவுசெய்து புள்ளி விபரங்களை இணைக்கவும்.)

பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டம் ----------

ஆண்டு ---------, சுட்டெண் ---------, Z புள்ளி ---------

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

(ஆ) கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சை :
முதலாம் அமர்வு :
ஆண்டு ----------, சுட்டெண் ----------

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |
| 11. | |
| 12. | |

இரண்டாம் அமர்வு :
ஆண்டு ----------, சுட்டெண் ----------

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |
| 11. | |
| 12. | |

10. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ?
(பொருத்தமான கூட்டில் " ✓ " குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவுசெய்து காரணத்தை குறிப்பிடுக :-

-------------------------------------------------------
-------------------------------------------------------
-------------------------------------------------------

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தேர்வுக்கு முன்னராயின் தகுதியற்றவனாவதற்கும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

முத்திரை

----------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **உறுதிப்படுத்தல்.-** விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................ எனக்கு தனிப்பட்ட முறையில் பரிட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2007 ....................... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்துடன் உறுதிப்படுத்து கின்றேன்.

----------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
அலுவலக முத்திரையுடன்.

உறுதிப்படுத்துபவரின் விபரம் :

முழுப்பெயர் :----.
தொழில் :----.
முகவரி :----.
திகதி :----.

12-754

---

எனது இல. :- பிடிஎ/1/01/ஏ,
தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்,
.............. 2007.

**தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்**

**வரவுசெலவுத்திட்ட உதவியாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை-2007**

அரசாங்கத்தின் முக்கிய செயற்பாடுகளை செயற்படுத்தும் திறனை அதிகரிக்கும் நோக்குடன் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களை நிரந்தரப் பதவிக்கு சேர்த்துக்கொள்ளுதல் தொடர்பாக நிதி, திட்டமிடல் செயலாளரின் 2000.07.25 ஆந் திகதிய பிடிஏ/1/29/ஏ ஆம்

இலக்க சுற்றுநிருப கடிதத்தின் பிரிவு 8:3 இற்கிணங்க தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட உதவியாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை (2007 ஆம் ஆண்டுக்கான) தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தினால் 2008.02.17 அன்று கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

2. (அ) இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பிழையின்றி தெளிவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை உமது திணைக்களத்தின் தலைவர் ஊடாக 28.01.2008 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு "தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம், பொதுத் திறைசேரி, கொழும்பு 01" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தினை பரீட்சார்த்தி, பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே தயாரித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தினை 8" x 12" அளவுடைய கடதாசியின் அதன் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும்.

3. அடையாள அட்டை.- பரீட்சார்த்திகள் மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சைக் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுமாறு தனது அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஏதாவது ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(2) தபால் தலைமை அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அடையாள அட்டை ;
(3) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட் பத்திரம்) ;
(4) தான் சேவையாற்றுகின்ற நிறுவனத்தின் தலைவர் ஊடாக பெயர் மற்றும் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படம்.

4. முதல் தடவை இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர் இப்பரீட்சையின் பொருட்டு எதுவித கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் பின்னர் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முழுப்பரீட்சைக்கும் தோற்றுவதாயின் கொழும்பு காலிமுகச் செயலக தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடிய ரூபா 150 பெறுமதியுடைய காசுக்கட்டளையொன்றை (தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் காசுக்கட்டளையை பெற்று) ஒரு பாடத்திற்கு தோற்றுவதாயின் ரூபா 75 இற்கான காசுக்கட்டளையை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுதல் வேண்டும். எக்காரணத்தின் பொருட்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

5. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்கான நேர அட்டவணையின் பிரதியுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்கு தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டையை பரீட்சை நிருவாகிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை நடப்பதற்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்பதை தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

6. ஒவ்வொரு பரீட்சைக்கும் வெவ்வேறாகவும், வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் பரீட்சார்த்திகள் தோற்றலாம். எவ்வாறாயினும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியெய்துவதற்கு பரீட்சார்த்திகள் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

7. **பரீட்சை நடைமுறை**.- வரவுசெலவுத் திட்ட உதவியாளர்கள் பொருட்டு நடாத்தப்படும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டுள்ளதாகும் :

1 ஆம் வினாப்பத்திரம் : அலுவலக முகாமை

அலுவலக முகாமையின் முக்கியமான சட்டங்கள், பிரமாணங்கள், சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தாபனக் கோவையின் கட்டளைகள், நிதிப் பிரமாணங்கள் 1 ஆம் பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். தாபனக் கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் உள்ளடக்கப்படும்.

அத்தியாயங்கள் I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXII, XXXIII மற்றும் அலுவலக நடவடிக்கைகளை திறம்பட செய்துகொள்வதற்கு தேவையான விடய அறிவையும் மதிப்பிடல்.

2 ஆம் வினாப்பத்திரம் : அரசாங்க வரவுசெலவுத் திட்ட நடைமுறையும் நிதிக் கட்டுப்பாடும்.- அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான கொள்கை ரீதியான சட்டகம் அரசாங்க கொள்கைகள், அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகள், அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தினை திட்டமிடல், தயாரித்தல் தொடர்பான நடைமுறைகள், வரவு செலவுத் திட்டத்தினை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் அளவுகோள்கள், வரவுசெலவுத் திட்டத்தின் வடிவமைப்பு, ஒதுக்கீட்டு நடைமுறைகள், வீரமன் நடைமுறை மற்றும் அரசாங்க செலவுகள் தொடர்பான கண்காணிப்பு நடை முறைகள், அரசியல் யாப்பின் கீழான நிதிக்கட்டுப்பாடு, பாராளுமன்றம், பகிரங்க கணக்குக்குழு மற்றும் பொது முயற்சிகளுக்கான குழுவினால் மேற்கொள்ளப்படும் நிதிக் கட்டுப்பாடு, கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைகள், பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர்களது கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் கடமைகள், ஆணைச்சீட்டுகள், நிதிக் கட்டுப்பாட்டிலிருந்தான விலகல்கள் போன்ற விடயங் களின் அடிப்படையில் இவ்வினாப்பத்திரம் அமைந்திருக்கும்.

3 ஆம் வினாப்பத்திரம் : பொருளியல் சம்பந்தமான கொள்கை ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான அறிவும், இலங்கை சமூக பொருளாதார அறிவும்.- பொருளாதார அபிவிருத்தி தொடர் பாக அரசாங்க உத்தியோகத்தர்கள் பெற்றிருக்கவேண்டிய பொருளியல் தொடர்பான கொள்கை ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான அறிவும் அத்தோடு விசேடமாக இலங்கையின் சமூக பொருளாதாரம் சம்பந்தமான அறிவையும் அறிந்துகொள்ளும் வகையில் இவ்வினாப்பத்திரம் அமையும்.

**கவனிக்க வேண்டியவை**.- மேற்கூறிய வினாப்பத்திரங்கள் 1, 2, 3 இன் பொருட்டு ஒவ்வொன்றிற்கும் 2 மணித்தியாலங்கள் ஒதுக்கப் பட்டுள்ளது. இவ்வினாப்பத்திரம் ஒவ்வொன்றிற்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் பரீட்சையில் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளைப் பெறல்

வேண்டும். ஒரே தடவையில் மூன்று பாடங்களிலும் சித்தியடையா விட்டால் மிகுதியான பாடங்களில் அடுத்துவரும் சந்தர்ப்பங்களில் எஞ்சிய பாடங்களுக்குத் தோற்றி சித்தியடையலாம்.

8. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எந்த விடயம் தொடர்பாகவும் தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் எடுக்கும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

டபிள்யூ. சுதர்மா கருணாரத்ன,
தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம்**

*வரவுசெலவுத்திட்ட உதவியாளர்களுக்கான*
*வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை-2007*

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.

1.2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.

1.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.4 பிறந்த திகதி :-

ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

2. வரவுசெலவுத் திட்ட உதவியாளர்கள் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

3. 3.1 அமைச்சின்/திணைக்களத்தின் பெயர் :----.

3.2 அலுவலக முகவரி (அனுமதி அட்டை அனுப்பும் பொருட்டு) :----.

4. பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) :----.

5. வர்த்தமானி அறிவித்தலின் 7 ஆம் பந்திக்கமைய நீர் தோற்றுகின்ற பாடங்கள் :----.

6. நீர் பரீட்சைக்கு தோற்றுவது முதல் தடவையாகவா ? :----.
(அவ்வாறு இல்லாவிடின் பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்திப்பெற்ற (இணைக்கப்பட்டுள்ளது) காசுக்கட்டளையின் இலக்கம் :----.

கட்டணம் (ரூபா) :----.
திகதி :----.
வழங்கப்பட்ட தபால் அலுவலகம் :----.

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் சரியானதென்றும், மேற்கூறப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எனக்கு உரிமை உண்டென்றும், இப்பரீட்சை தொடர்பில் தேசிய வரவுசெலவுத் பணிப்பாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகிறேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

(i) இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற வரவுசெலவுத் திட்ட உதவியாளர் என்பதையும் ;
(ii) மேற்கூறப்பட்டுள்ள தகவல்கள் சரியானதென்பதையும் ;
(iii) இவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு எல்லாத் தகுதியும் உடையவர் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையை இடல் வேண்டும்)

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

12-802

---

**கலாசார அலுவல்கள் அமைச்சு**

டவர் மண்டபத் திரையரங்கு மன்றம்/இலங்கை திறந்த பல்கலைக்கழகம் வழங்கும் கலைமாணிப் (நாடக மற்றும் அரங்கவியல்) பட்டத்திற்கு [Bachelor of Education (Drama & Theatre) Degree] முன்னோடியான நாடகம் மற்றும் அரங்கயியல் தொடர்புடைய இரண்டு வருட முழுநேர உயர் டிப்ளோமாக் கற்கைநெறி [Full time two year course of Higher Diploma in Drama & Theatre] - கல்வி ஆண்டு 2008/2009

சர்வதேச அரங்கவியல் நிறுவனத்தின் இலங்கைக்கான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டுள்ள டவர் மண்டபத் திரையங்கு மன்றத்தின் அனுசரணையுடன் இயங்கும் நாடகம் மற்றும் அரங்கவியல் கலைக்கூடம், நாடகம் மற்றும் அரங்கவியல் தொடர்புடைய இரண்டு வருட முழுநேர உயர் டிப்ளோமாக் கற்கைநெறியை நடாத்துகின்றது. இக்கற்கை நெறியில் தேறிய பின்பு, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி சார்ந்த பீடத்தினால் நடாத்தப்படும் நாடகம் மற்றும் அரங்கியல் கலைமாணிப் பட்டத்திற்கான [B.Ed (Drama & Theatre)] கற்கைநெறியைத் தொடருவதற்கான தகைமை கிடைக்கின்றது. இந்தக் கற்கை நெறியைக் கற்பதற்கு அவசியமான அடிப்படைத் தகைமையை டவர் மண்டபத் திரையரங்கு மன்றத்தின் அனுசரணையில் இயங்கும் நாடகம் மற்றும் அரங்கவியல் கலைக்கூடத்தினால் நடாத்தப்படும் இரண்டு வருட முழுநேர உயர் டிப்ளோமாக்

கற்கைநெறி வழங்குகின்றது. இதற்கான விண்ணப்பங்கள் தகைமையுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இக்கற்கை நெறிக்கு ஒரு கல்வியாண்டிற்குச் சேர்த்துக்கொள்பவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், எந்த ஒரு பிரிவிலும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும், 30 வயதிற்குக் குறைந்தும் உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| கல்வி ஆண்டு | செயற்படுத்துதல் | பட்டக் கற்கைநெறி<br>உயர் டிப்ளோமா கற்கைநெறி | முழுநேரம்/ பகுதி நேரம் |
|---|---|---|---|
| 01 | டவர் மண்டபத் திரையரங்கு மன்றம் | உயர் டிப்ளோமா 1 ஆம் வருடம் | முழுநேரம்/ வதிவிடமற்ற |
| 02 | நாடகம் மற்றும் அரங்கவியல் கலைக்கூடம் | உயர் டிப்ளோமா 2 ஆம் வருடம் | |
| 03 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | கலைமாணிப் பட்டம் (கல்வி) 3 ஆவது வருடம் | பகுதி நேரம் |
| 04 | கல்விசார்ந்த பீடம் | கலைமாணிப் பட்டம் (கல்வி) 4 ஆவது வருடம் | |

நாடகம் மற்றும் அரங்கவியல் தொடர்பான இரண்டு வருட முழுநேர டிப்ளோமா கற்கைநெறிக்குரிய கட்டணம் :

கற்கைநெறிக் கட்டணம் (இரண்டு வருடங்களுக்கும்) - ரூபா 20,0000

வேறு (நூலகம், பதிவுசெய்தல் மற்றும் சீருடை) - ரூபா 3,500

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், 'பணிப்பாளர் நாயகம், டவர் மண்டபத் திரையரங்கு மன்றம்' என்ற பெயருக்கு எழுதப்பட்ட 'பொரல்ல' அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தப்படற்பாலதான ரூபா 300 க்கான காசுக் கட்டளையுடன் தமது பெயரும் முகவரியும் எழுதிய 9" x 4" அளவிலான முத்திரை ஒட்டிய கடித உறையுடன் கீழே தரப்படும் முகவரிக்குத் தபால் மூலமாக அனுப்பி அல்லது நேரில் வந்து விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

விண்ணப்பப்பத்திரங்கள் கையேற்கும் இறுதித் திகதி : 2007, திசெம்பர் 31.

டக்ளஸ் சிறிவர்தன (சட்டத்தரணி),
பணிப்பாளர் நாயகம்.

டவர் மண்டபத் திரையரங்கு மன்றம்,
'சவ்சிரிபாய',
இல. 123, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07.
தொலைபேசி இல. : 2682324, 2387141
மின்னஞ்சல் : towerhall@sltnet.lk
வெப்தளம் : towerhall.lk

12-703

---

**இளைஞர் படையணி-2008**

இளைஞர் அலுவல்கள் அமைச்சு

**"யொவுன் திரிய" பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களை சேர்த்துக் கொள்ளல் - 2008**

**"திறமையான சந்ததியினரை நோக்கி என்றும் தங்குமிடம்"**

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துள்ள உங்களது வெற்றிகரமான எதிர்காலத்திற்கு அவசியமான அறிவு, ஆளுமை விருத்தி, மொழி விருத்தி மற்றும் கணனி அறிவு என்பவற்றை வழங்குவதன் மூலம் உங்களது எதிர்கால இலக்கினை வெற்றி கொள்வதற்கு அவசியமான உறுதியான அடிப்படையை "பாடசாலையில் இருந்து தொழில் உலகிற்கு" என்ற தொனிப்பொருளின் கீழ் கட்டியெழுப்புவது "யொவுன் திரிய" நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். தேசிய மற்றும் சர்வதேச தொழிலினை இலக்காகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சியாகவும் ஆத்ம விசுவாசத்துடன் கூடிய சமூக இயலுமையின் மூலம் எதிர்காலத்தினை வெற்றி கொள்வதற்கு எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகளும் இந்நிகழ்ச்சி தொடர்பாக விண்ணப்பிக்க முடியும்.

2. **சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் :**

* 2008.01.16 ஆந் திகதியில் வயது 16- 26 வருடங்களாக காணப்படல்.
* க. பொ. த. (சா. த) உடன் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்திருத்தல்.
* சாரணியம், மாணவப்படை, விளையாட்டு மற்றும் வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருத்தல் மேலதிக தகைமையாகும்.

3. **பயிற்சி நெறி ஆரம்பிக்கும் திகதி :**

2008 தை 16 - (2008 ஆண்டுக்கான 1வது சேர்த்தல்)
2008 ஆடி 16 - (2008 ஆண்டுக்கான 2வது சேர்த்தல்)

4. **பயிற்சி நெறி வடிவம் :**

1-04 வரை நிறுவனப் பயிற்சி (சகல வேலை நாட்களிலும் காலை 7.30 தொடக்கம் மாலை 4. 30 வரை)

04-06 மாதம் வரை

| நிறுவனப் பயிற்சி | மேம்படுத்தல் |
|---|---|
| 1. மொழித்திறன் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) | 1. வெளியகப்பயிற்சி |
| 2. கணனிப்பயிற்சி | 2. முயற்சியாண்மை விருத்தி |
| 3. உடற்பயிற்சி | 3. மனித விருத்தி செயற்பாடுகள் |
| 4. தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை | 4. தனி மற்றும் குழு ஒப்படை |
| 5. சமூக விஞ்ஞானம் | 5. ஜீவனோபாய அபிவிருத்தி |
| 6. தேசிய உரிமை | 6. தியானத்தின் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தல் |
| 7. அழகியற் கல்வி (நடனம், சங்கீதம், சித்திரக்கலை) | |
| 8. ஆளுமை விருத்தி | |

5. **உங்களுக்கு கிடைக்கும் பயன் :**

* தொழில் நுட்ப கல்வி மற்றும் தொழில் பயிற்சியில் ஈடுபடுத்தல்.
* பயிற்சி காலத்தில் மாதாந்தம் ரூபா 1,000 ஊக்குவிப்பு படி வழங்கப்படல்
* ரூபா 3,000 சீருடைக் கொடுப்பனவு அல்லது சீருடை வழங்கப்படல்
* பயிற்சிக் காலத்தில் காலை, மாலை உணவு மற்றும் தேநீர் வழங்கப்படல்
* விளையாட்டு தொடர்பான பயிற்சிப்பட்டறை, இளைஞர் முகாமில் பங்குபற்றல்
* பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படல்
* தொழில்நுட்ப பயிற்சிக்காக ரூபா 10,000 வழங்கப்படும்.

6. **விண்ணப்பங்கள் அனுப்புதல்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2008.01.10 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உங்களுக்கு அண்மையில் உள்ள இளைஞர் படையணி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

7. **நேர்முக பரீட்சை**.- இளைஞர் படையணி நிகழ்ச்சிக்காக சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை உங்களால் குறிப்பிடப்பட்ட இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் 2008.01.10 ஆந் திகதி மு.ப. 9.00 மணியில் இருந்து நடாத்தப்படும். நேர்முகப்பரீட்சை முடிவில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

8. **பயிற்சி நெறி ஆரம்பம்**.- 2008.01.10 ஆந் திகதி நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பயிற்சி 2008.01.16 ஆந் திகதி ஆரம்பிக்கப்படும்.

பணிப்பாளர்,
இளைஞர்படையணி.

இளைஞர் படையணித் தலைமையகம்,
இல. 974/4,
பன்னிப்பிட்டிய, பத்தரமுல்ல.
தொலைபேசி இலக்கம் : 0602152660, 0602152661, 0602152662, 0602152663, 0602152664

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### இளைஞர் படையணி

*யொவுன் திரிய பயிற்சி நிலையத்துக்கு உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளல்*

1. மாவட்டம்

2. தேர்தல் பிரிவு

3. பிரதேச செயலாளர் பிரிவு

4. கிராம சேவையாளர் பிரிவு

5. பயிற்சி பெறுவதற்கு எதிர்பார்க்கும் பயிற்சி நிலையத்தின் பெயர்

6. குடும்பப் பெயருடன் முழுப்பெயர் தேசிய அடையாள அட்டையில் குறிப்பிட்டபடி

7. முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்)

8. நிரந்தர முகவரி

9. பிறந்த திகதி

2008.01.16 இல் வயது : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

10. தேசிய அடையாள அட்டை இலக்கம்

11. பால் (ஆண்/பெண்) :

12. கல்வித் தகைமை : (1) க. பொ. த. (உ. தரம்) (2) க. பொ. த. சா. தரம்
(3) 8 ஆம் வகுப்பு சித்தி (4) 8 ஆம் வகுப்பு வரை

13. வேறு செயற்பாடுகள் பாடசாலை, மாணவத் தலைவர், விளையாட்டுத் தலைவர், இல்ல, மாவட்ட, பிரதேச மற்றும் தேசிய மாவட்ட விளையாட்டுப் போட்டி மாணவர் படை சாரண்ய சங்கங்கள் சுய இயக்கங்கள் சமய பாடசாலை என்பவற்றில் ஈடுபட்டிருப்பின் அது தொடர்பான விபரம் :

14. நிர்மாணத்துவமான செயற்பாடுகள்

15. தற்போது தொழிலில் ஈடுபட்டிருப்பின் அது தொடர்பான விபரம் பெயர் முகவரி

16. வருங்காலத்தில் எதிர்பார்க்கும் தொழில்
   1. அரசாங்க துறையில்
   2. (அரசாங்கம் அல்லாத) தனியார் துறையில்
   3. சொந்த வியாபாரம்
   4. வெளிநாட்டு வேலை வாய்ப்பு
   5. சுய தொழில்
   6. வேறு

மேலே குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானதும் செம்மையானதுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள்**

| தொடர் இல | மாவட்டம் | தேர்தல் பிரிவு | பயிற்சி நிலையத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | கம்பஹா | பியகம | கெய்யத்துடுவ | கெய்யத்துடுவ - மாகொல தெற்கு - மாகொல | 0112964040 |
| 2. | | கட்டான | கட்டான | தம்மல்லோக, வலாகன்கட, கட்டுநாயக்கா | 0112260020 |
| 3. | | அத்தனகல | அத்தனகல | வத்துபிடிவல, அத்தனகல்ல, நிட்டம்புவ | 0332282232 |
| 4. | | தொம்பே | தொம்பே | ததுன்கொள்வத்த, மண்டவளதொம்பே | 0602339834 |
| 5. | | கம்பகா | யக்கல | வெரளவத்த, யக்கல, கம்பஹா | 0332233534 |
| 6. | | திவுலபிட்டிய | திவுலபிட்டிய | திவுலபிட்டிய, கெட்டிபொல தயுலுமிட்டிய | 0602337964 |
| 7. | களுத்துறை | புளத்சிங்கல | புளத்சிங்கல | புளத்சிங்களை | 0342282322 |
| 8. | மாத்தளை | லக்கல | லக்கல | நாவுல, ஆறன்கள, நாவுல | 0662246204 |
| 9. | | தம்புள்ள | தம்புள்ள | இனாமலுவ, தம்புள்ள | 0602665230 |
| 10. | கண்டி | கம்பொள | கம்பொள | ஆசிரியர் பயிற்சி கல்லூரி கம்பளை | 0812352335 |
| 11. | நுவரெலியா | நுவரெலியா | நிபிலிமன்ன | நபிலிமன்ன, அபேவெல, நுவரெலிய | 0602536332 |
| 12. | | கக்குறன்கெத்த | நிகிலஸ்கட | நிகிலஸ்கட, கங்குறன்கெத்த | 0812365849 |
| 13. | காலி | போபே | காலி - போபே | வெனகொட, போபே, காலி | 0912233182 |
| 14. | | அக்மினே | அக்மினே | இகலகட, வுகல்துவ, ஆக்மமன | 0912239595 |
| 15. | மாத்தறை | அக்குரஸ்ச | அக்குரஸ்ச | மாறம்ப, அக்குறஸ்ச | 0414921003 |
| 16. | அம்பாந் தோட்டை | தங்காலை | எரமினியாய | குங்கம, எரமின்ய | 0602489156 |
| 17. | | முல்கிரிகல | வீரகெட்டிய | நைகல அக்குறுவெல, வீரகெட்டிய | 0472257143 |
| 18. | | திஸ்ஸமகராம | திஸ்ஸமகராம | சூரிய வெவ | 0472288169 |
| 19. | திருகோணமலை | சேருவில | கந்தளாய் | சேனபுர, கந்தளாய் | 0262244088 |
| 20. | புத்தளம் | நாத்தாண்டிய | நாத்தாண்டிய | சாகரபம, நாத்தாண்டிய | 0325673377 |
| 21. | குருணாகல | குளியாபிட்டிய | தகம்மெத | தகம்மெத, வேலகம, குளியாப்பிட்டிய | 0602879228 |
| 22. | | வாரியபொல | வாரியபொல | உசாலிமாவத்தை, வாரியபொல | 0602973575 |
| 23. | | மாவத்தகம | மாவத்தகம | தென்வோர்வத்த, மாவத்தகம | 0372298668 |
| 24. | | பண்டுவஸ்நுவர | பண்டுவஸ்நுவர | நுகவெவ சந்தி, பண்டுக்கன்நுவர | 0372291803 |
| 25. | | தொடங்கஸ்வத்த | தொடங்கஸ்லந்த | மதுரகொட, தொடங்கஸ்வ | 0374924982 |
| 26. | அநுராதபுரம். | கெக்கிராவ | கெக்கிராவ | மகாவலி கட்டிடம், கெக்கிராவ | 0252263297 |
| 27. | | கலாவெவ | கலாவெவ | கல்னேவ, புன்னாவ | 0252269946 |
| 28. | | அநுராதபுரம் | சாலியபுரம் | அநுராதபுரம், சாலியபுரம் | 0252222297 |
| 29. | பொலநறுவ | பொலநறுவ | அறலகன்வில | கன்சயபாலம, ஆறகன்வில, பொலநறுவ | 0602279016 |
| 30. | பதுளை | பண்டாரவளை | பண்டாரவளை | பிந்துனுவெவ, மகியன்கன | 0572222214 |
| 31. | | மகியங்கனை | மகியங்கனை | மாபாகட வெவ, மகியன்கன | 0552257059 |
| 32. | மொனராகளை | வெள்ளவாய | தனமல்வில | சர்வோதய நிலையம், தனமல்லிய | 0602473112 |
| 33. | கேகாலை | தெரனியகலை | பட்டனகல | பட்டனகலபண்ணவவ, தெரணியகல | 0362258108 |
| 34. | | களிகமுவ | களிகமுவ | ஆகிதெனிய, கனிகமுவ | 0602359735 |
| 35. | | கேகாலை | கேகாலை | கேகாலை | 0602152600 |
| 36. | | அம்பேபுஸ்ஸ | அம்பேபுஸ்ஸ | அம்பேபுஸ்ஸ | 0602354264 |
| 37. | இரத்தினபுரி | நிவித்திகலை | நிவித்திகலை | அம்பலந்தெனிய, வட்டபொட்ட வீதி, நிவித்திகல | 0452279970 |

12-666

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.